நாவலருடைய தருமங்களை அவருக்குப்பின் நடத்துவதற்கு, அவருடைய காலத்திலேயே அவரால் நியமிக்கப்பட்ட அவருடைய மாணவராகிய க. சதாசிவப்பிள்ளை, தனக்குப்பின் ச. பொன்னம்பல பிள்ளையை நியமித்து எழுதிய அறக்கட்டளை ஆவணம்:

1910௵ அக்டோபர்௴ 21௳ சிதம்பரம் கஸ்பா மாலைகட்டித் தெருவிலிருக்கும் யாழ்ப்பாணத்து நல்லூர் கனகசபாபதிப்பிள்ளை குமாரர் வேளாள சாதி சிவமதம் பிரசை வியாபாரம் ந. க. சதாசிவப்பிள்ளையாகிய நான் தெளிந்த அறிவோடும் தருமசிந்தனையோடும் எழுதிவைத்த டிறஸ்டீட் (Trust Deed) பத்திரம்.

நான் யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்து கல்வி கற்றுக்கொண்டிருக்குங் காலத்தில் மேற்படியூர் ஸ்ரீலஸ்ரீ-ஆறுமுகநாவலரவர்களுடைய கல்வித்திறமையையும் ஒழுக்கத்தையும் சைவசமயபத்தியையும் அவர்கள் என்மீது வைத்த அன்பையுங்கண்டு அவர்களை அடுத்து அவர்களிடத்திலே கல்விகற்றுக் கொண்டுவந்தேன். நான் நாவலரவர்களிடத்திலே கல்வி கற்றதுமாத்திரமன்றி அவர்களாலே தாபித்து நடத்தப்பட்டதும் அவர்களுக்குப் பின் என்னால் நடத்தப்பட்டு வருகின்றதுமாகிய யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை கிழக்கிலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையில் நெடுங்காலம் வேதனமின்றிக் கல்வி கற்பித்தும் அந்நாவலரவர்கள் கல்விவிருத்தியையும் சமயவிருத்தியையும் குறித்துச்செய்த நன்முயற்சிகளை அவர்களுக்குத் துணையாக அவர்களோடு ஒருங்கு இருந்து நடத்தியும் அக்காலத்தில் நான் சம்பாதித்த பொருளில் என்செலவு போக எஞ்சியதை அவர்கள் கைக்கொண்டு நடத்திவந்த வித்தியாசாலைத் தருமத்துக்கும் பிறதருமங்களுக்கும் உபயோகித்தும் வந்தேன்.

2. நான் பாலியவயசிற்றானே குடும்பத்தைவிட்டு இப்படியே என் வித்தியாகுருவாகிய ஆறுமுகநாவலரவர்களுடன் யாழ்ப்பாணத்திலிருந்து பின் அவர்களோடுகூட இந்தியாவுக்குவந்து அவர்கள் பரிசோதித்தும் நூதனமாக இயற்றியும் தந்த நூல்களை அச்சிட்டும் நானே சிலநூல்களைப் பரிசோதித்து அச்சிட்டும் வேறு சிலதொழின் முயற்சிகள்செய்தும் பொருள் சம்பாதித்தேன். அப்பொருளில் நான் செலவுசெய்ததுபோக எஞ்சியபொருளை மேற்சொல்லிய ஆறுமுகநாவலரவர்களாற் றாபிக்கப்பட்டு அவர்களிருக்குங் காலத்திலும் அவர்களுக்குப் பிற்காலத்திலும் என்னால் நடத்தப்பட்டு வருகின்ற சிதம்பரம் மேலவீதியிலிருக்கும் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமத்துக்கும் அவர்கள் கைக்கொண்டு நடத்திய வேறு தருமங்களுக்கும் செலவுசெய்து கொண்டுவருகின்றேன்.

3. மேற்சொல்லியபடி நான் ஆறுமுகநாவலரவர்களோடு நெடுங்காலம் இவ்விந்தியாவில் வந்திருந்து சம்பாதித்த பொருள்களைக்கொண்டு ஆறுமுகநாவலரவர்களுடைய கோட்பாட்டின்படி சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்தருமத்தையும் பிறதருமங்களையும் நடத்திக்கொண்டு வருகின்றதுபோல இனிமேலும் என்சீவியகாலத்திலும் அதற்குப் பிற்காலத்திலும் எப்பொழுதும் நடத்திவரும்படி, ஆறுமுகநாவலரவர்களுக்கும் அவர்களுடைய மாணாக்கர்களுட்சிரேட்டரும் வித்துவசிரோமணியுமாகிய ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்களுக்கும் மாணாக்கரும் ஏறக்குறையப் பதினேழு வருஷகாலமாகச் சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலை மானேஜராயிருந்து அதனை நடத்திவருபவரும் ஆகிய யாழ்ப்பாணம் கோப்பாய் வடக்கு சரவணமுத்துப்பிள்ளை குமாரர் பொன்னம்பலபிள்ளையை டிறஸ்டியாக நியமித்துப் பின்னுற் குறிக்கப்படும் விலைமதிப்புள்ள என்னுடைய தாவரசங்கமப் பொருள்களெல்லாவற்றையும் மேற்குறித்த சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைக்குரியதாக இந்தப்பத்திர மூலமாக இவரிடம் ஒப்படைத்துவிட்டேன்.

4. இந்த டிறஸ்டியாகிய பொன்னம்பலபிள்ளை தமக்குப் பிற்காலத்தில் இச்சிதம்பர வித்தியாசாலைத் தருமத்தையும் பின்னே என்னுற் குறிக்கப்படும்

பிறதருமங்களையும் நடத்திவரும்படி நாவலரவர்களுடைய மாணாக்கர் பரம்பரையில் சைவசமயபத்தியும் கல்வியறிவொழுக்கமுமுள்ள ஒருவரை அல்லது பலரைத் தெரிந்தேற்படுத்தி வைத்தல்வேண்டும். ஆறுமுகநாவலரவர்களுடைய மாணாக்கர் பரம்பரையில் கல்வியறிவொழுக்கமுள்ளவர்களை இந்த வித்தியாசாலைக்கு டிறஸ்டியாக நியமித்தல்வேண்டும் என்னும் நியதி பரம்பரையாக எப்பொழுதும் தவறாமல் நடைபெற்று வருதல்வேண்டும். ஒருவேளை இந்த டிறஸ்டியாகிய பொன்னம்பலபிள்ளையாவது இவருக்குப்பின் இந்த இடத்துக்கு டிறஸ்டியாக வருபவர்களாவது தமது சீவியகாலத்தில் அப்படி ஏற்படுத்தாமல் விட்டுவிட்டால் மேற்சொல்லிய யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணைகிழக்கிலுள்ள ஆறுமுகநாவலரவர்களுடைய சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு டிறஸ்டியாயிருந்து அதனை நடத்துபவர் யாவரோ அவரே இந்தத் தருமங்களையும் ஒப்புக்கொண்டு ஒழுங்காக நடத்தித் தமக்குப்பின் இந்தப் பாராவில் முன்னேசொன்ன இலக்ஷணமுடைய ஒருவரை அல்லது பலரை டிறஸ்டியாக நியமித்தல்வேண்டும். அப்படி அவர்வந்து ஒப்புக்கொண்டு நடத்தும்வரையும் இச்சிதம்பர வித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயராயிருப்பவரே இவ்வித்தியாசாலைத் தருமத்தையும் பிறதருமங்களையும் சரிவரநடத்தி வரவுசெலவு கணக்குக்களை மேற்குறித்த யாழ்ப்பாணச்சைவப்பிரகாச வித்தியாசாலை டிறஸ்டிக்கு அல்லது அவருடைய அதிகாரம் பெற்றவர்களுக்குச் சரிவர ஒப்பித்தல் வேண்டும்.

5. இவராவது இவருக்குப்பின்வரும் டிறஸ்டிகளாவது பின்னே E என்னும் அக்ஷரமுள்ள பாராவிற்காணப்படும் வித்தியாநுபாலன யந்திரசாலையிற் பதிப்பித்துவிற்கும் புத்தகங்களால் வரும்பொருளையும் மற்றைத்தாவரசங்கம சொத்து வரும்படியில் வரிகிஸ்தி மராமத்துச் செலவுகள்போக மிஞ்சியபொருளையும் சேர்த்து அப்பொருள்கொண்டே பின்னேநான் சொல்லுந்தருமங்களை ஒழுங்காக நடத்திவரல்வேண்டும். இப்படியன்றித் தாவரசொத்துக்களைக் கிரயம் பந்தகம் போக்கியம் முதலியன செய்தலாகாது. செய்தால் அவைகள் ஒன்றும் செல்லத்தக்கவைகள் அல்ல.

6. பின்னே E என்னும் அக்ஷரமுள்ள பாராவிற் காணப்பட்டதும் நான் இப்போது நடத்திக்கொண்டு வருவதும் சென்னைத்தங்கசாலை வீதி 300-வது நெம்பர் வீட்டிலிருப்பதுமாகிய வித்தியாநுபாலனயந்திரசாலையை அங்கே வைத்து நடத்துவது இவருக்குக் கஷ்டமாயிருக்குங்காலத்தில் அதைச் சிதம்பரத்திற் கொண்டுவந்து வைத்துநடத்தலாம். அப்போது ஷெ 300-நெம்பர் வீட்டை இவர்விற்று அப்பொருள்கொண்டு சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைக்குத் தகுந்த தாவரசொத்து வாங்கிவிடல் வேண்டும்.

7. என்பேரிலும் ஆறுமுகநாவலரவர்கள் பேரிலுமுள்ள காப்பிரைட் என்னும் உரித்து என்னுடைய டிறஸ்டியாகிய பொன்னம்பலபிள்ளைக்கும் இவருக்குப்பின் இவருடைய இடத்திற்கு வருபவர்களுக்குமே உரியது. இவர்கள் இந்த உரித்தை வேறெவர்களுக்காவது விக்கிரயம் அல்லது மாற்றுதல் செய்யக்கூடாது.

என்னுடைய டிறஸ்டியாகிய பொன்னம்பல பிள்ளையும் இவருக்குப் பின் இவர் இடத்துக்கு வருபவர்களும் நடத்தவேண்டியவைகள் :—

8. சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலையின் உபாத்தியாயர் சம்பளம் முதலிய செலவுகளைச்செய்து நான்நடத்தி வருவதிற் குறைவின்றி ஒழுங்காக நடத்தி ஷெ வித்தியாசாலைத்தருமத்தை மேன்மேலும்விருத்திசெய்துவருதல்.

9. சிதம்பரக்ஷேத்திரத்தில் நடக்கும் ஆனிமார்கழி உற்சவத்தில் அல்லது வேறு விசேஷகாலங்களில் வருஷத்திலொருமுறை வித்துவான்கள் பிரபுக்கள் முதலாயினோர் கூடுகிறசபையில் இவ்வித்தியாசாலை மாணாக்கர்களுக்குப் பரிசளித்து இதன்வரவு செலவுகணக்குக்கள் முதலியன அடங்கிய விஞ்ஞாபனத்தை வாசித்துப்பின்பு அதனை அச்சிட்டு வெளிப்படுத்தல்.

10. என்வித்தியாகுருவாகிய ஆறுமுகநாவலரவர்கள் கல்வியில் விருப்பமும் நல்லொழுக்கமுமுள்ள சிலபிள்ளைகளுக்கு அன்னவஸ்திரமுதலியன கொடுத்துச் சமயநூல்களையும் கருவிநூல்களையும் கற்பித்துச் சைவசமயத்தையும் கல்வியையும் விருத்திசெய்ய வேண்டுமென்று உத்தேசித்திருந்தபடியால் அவ்வியல்புடைய மாணாக்கர்கள் கல்விகற்பதற்கென்று இப்பொழுது நூதனமாக என்னாற்செய்வித்துப் பிரதிட்டை செய்விக்கப்பட்ட வித்தியாசாலையில் பொருள்வருவாய்க்குத் தக்கபடி மாணாக்கர்களுக்கு அன்னவஸ்திரங்கொடுத்து அதில் உயர்தரக்கல்விகற்பித்துச் சைவசமயத்தையும் கல்வியையும் வளர்த்து வருதல்.

11. இவ்வித்தியாசாலைப் பொருள்வருவாய் இதற்குமேலும் விருத்தியடைந்து வருகிறகாலத்தில் இவ்வித்தியாவிலே அவசியமென்று காணுகிற பிறவிடங்களிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் தாபித்து நடத்தி அவைகளின் வரவுசெலவு கணக்குக்களையும் இச்சிதம்பரவித்தியாசாலைக் கணக்கோடுசேர்த்து அச்சிட்டு வெளிப்படுத்துதல்.

12. பின்னே A 2-ம் இலக்கப்பாராவிற் காணப்பட்ட ஸ்தானத்திற் சேக்கிழார்நாயனார் ஆலயங்கட்டிப் பிரதிட்டை செய்தல்வேண்டும் என்று நாவலரவர்கள் உத்தேசித்து நிலம் வாங்கி அதற்காகச் சிலாவிக்கிரகமும் செய்வித்து வைத்திருக்கிறபடியால் ஷெடி ஸ்தானத்தில் ஷெடி ஆலயத்தைக் கட்டிப் பிரதிட்டை செய்து அதற்கு நித்தியபூசை நடத்திவரும்படி செய்தல்.

13. சிதம்பரம் நடேசப்பெருமானுக்கு ஸ்ரீமத் ஐ. தங்கசாமிதீக்ஷிதர் அல்லது வாரிசுகாரர்களைக்கொண்டு மாசந்தோறும் மூன்றுரூபா செலவு செய்து நாள்தோறும் இரண்டு நிவேதனம் தனித்தனி செய்வித்துவருதல்.

14. சிதம்பராலயத்தில் திருமூலட்டானேசுரருக்கு உச்சிக்கால அபிஷேகத்திற்காகப் பாற்காவடிப் பணிவிடை செய்பவருக்கு நான் இப்போது நடத்திவருவதுபோல மாசம் ஒன்றுக்கு ரூபா இரண்டரை சம்பளங்கொடுத்து அதனை நடத்திவருதல்.

15. ஆறுமுகநாவலரவர்கள் சிவசாயுச்சியம் பெற்ற திருநக்ஷத்திரமாகிய கார்த்திகைமாசத்து மகநக்ஷத்திரத்தில் எண்பதுரூபா செலவுசெய்து சிதம்பரநடேசப்பெருமானுக்கு அபிஷேக நிவேதனமும் சிதம்பரதலத்தில் மாகேசுவரபூசையும் வருஷந்தோறும் நடத்திவருதல்.

16. சிதம்பர வித்தியாசாலைத் தருமத்துக்காகப் பொருளுபகரித்த யா. கா. ஆறுமுகப்பிள்ளையவர்கள் சிவபதமடைந்த திதியாகிய மார்கழிமீ அமாவாசியில் வருஷந்தோறும் ஏழுரூபா செலவுசெய்து சிதம்பராலயத்தில் தக்ஷிணாமூர்த்திக்கு அபிஷேகநிவேதனஞ் செய்வித்துப் பரதேசிகளுக்கு விநியோகஞ்செய்வித்துவருதல்.

17. யாழ்ப்பாணம் காரைதீவு ச. கந்தப்பிள்ளை என்பேருக்கு 1904-ம் வருஷம் ஜனவரிமீ 13உ எழுதிவைத்திருக்கிற செட்டில்மெண்டுப் பத்திரப்படி நான் நடத்திவருகிற ஸ்ரீசிதம்பரசபாநாதர் கோயில் இரண்டாங்காலக்

குளித்தளிகை நிவேதனக்கட்டளையை மாசந்தோறும் ரூபா ஏழரை செல வழித்துத் தவறாமல் நடத்திக்கொண்டு வருதல்.

18. நான் தேகவியோகமடையுங்காலத்தில் என்னுடைய அந்திய கிருத்தியத்துக்காக ரூபா நூறு செலவுசெய்தல். இன்னும் நான் தேகவியோகமடையும் நக்ஷத்திரத்தில் ரூபா மூன்றரைசெலவுசெய்து சிதம்பர நடேச பெருமானுக்கு அபிஷேக நிவேதனமும் ரூபா ஏழுசெலவுசெய்து சிதம்பரத்தில் மாகேசுவரபூசையும் வருஷந்தோறும் நடத்திவருதல்.

19. 15, 16, 18, ம் இலக்கப்பாராவிற்கண்ட செலவுகளைக் காலத்துக்கும் வருமானத்துக்கும் தக்கபடி என்னுடைய டிரஸ்டியாகிய பொன்னம்பலபிள்ளை தனதிஷ்டப்படி அதிகப்படுத்தியுஞ் செய்யலாம்.

20. இன்னும் இந்த டிரஸ்டியாகிய பொன்னம்பலபிள்ளை வித்தியாசாலை அபிவிருத்தியையும் சீர்திருத்தத்தையும் பற்றி என்னென்ன ஏற்பாடு செய்ய வேண்டுமோ அவைகளை நூதனமாகவுஞ் செய்ய இவருக்கு அதிகாரமுண்டு.

21. இந்த டிரஸ்டீட்டுப் பத்திரத்திற்கண்டபடி சொத்துக்களைப் பாது காத்து விருத்திசெய்து நான் நடத்தி வருகின்ற புத்தக வியாபாரத்தையும் வித்தியாசாலைத் தருமத்தையும் மற்றைத் தருமங்களையும் நடத்திவருவதற்காக இஷ்டப்பட்டால் மாசந்தோறும் ரூபா முப்பதுக்கு மேற்படாமல் எடுத்துக்கொள்ளலாம்.

ந. க. சதாசிவப்பிள்ளை கையெழுத்து.

சாக்ஷிகள்:—

ஐ. தங்கசாமிதீக்ஷிதர் அறிவேன்.
சி. பொ. குப்புசாமிதீக்ஷிதர் அறிவேன்.
நா. சிவராமச்செட்டி அறிவேன்.
அ. முத்துக்குமாரபிள்ளை அறிவேன்.
ரு. அப்பாக்குட்டிப்பிள்ளைஎன்கிற முத்தையாபிள்ளை அறிவேன்.
சி. வே. ஆறுமுகப்படையாச்சி அறிவேன்.
நெட்டெழுத்துள்பட ஸி. ஸ்ரீநிவாசராகவய்யங்கார் அறிவேன்.
வக்கீல் ராகவாசாரியர் சிதம்பரம்.
சிதம்பரம் தெற்குவீதி நடேசஅய்யர் அறிவேன்.

1910ஹு அக்டோபர்மீ 24வ பகல் 12-45 சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் ந. க. சதாசிவப்பிள்ளை வீட்டில் தாக்கல் செய்தது.

1-ம் நெம்பர் புஸ்தகம் 442-வது வாலியம் 171-181-வது பக்கங்களில் 2712 நெ. ஆக ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.